

# நோர்வே ஈழத்தமிழர் அவைக்கான தேர்தல்

## 15.நவம்பர் 2009


# நோர்வே ஈழத்தமிழர் அவை

NORWEGIAN COUNCIL OF EELAM TAMILS

www.ncet.no

நவம்பர் 2009




## உண்மைகள் உறங்குவதில்லை

பக்கம் 4

## தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் நிலைப்பாடு

பக்கம் 4


தொடர்புகளுக்கு:
பஞ்சகுலசிங்கம் கந்தையா

தொலைபேசி:
+47 979 75 308

மின்னஞ்சல்:
post@ncet.no




வட்டுக்கோட்டைப் பிரகடத்தின் அடிப்படையில் உருவாகும்

# நோர்வே ஈழத்தமிழர் அவைக்கான தேர்தல் ஏன்? எதற்கு??

பக்கம் 2

**மக்களே மக்களுக்காய் மலர்விக்கும் மக்களவை**

# நோர்வே ஈழத்தமிழர் அவைக்கான தேர்தல்



வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மீளுறுதிப்படுத்தும் வகையில் நோர்வேயில் நடைபெற்ற வாக்கெடுப்பிற்குத் தமிழர்களின் பேராதரவு கிடைத்ததன் அடிப்படையில் இம்முயற்சியானது முன்னெடுக்கப்படுகின்றது. அரசியல், சமூகம், பொருண்மியம்,பண்பாடு, மொழி, கல்வி எனப்பல்வேறு தளங்களிலும் தக்க பணியாற்றிடத் தக்கதோர் அவைதனைத் தேர்தல் மூலம் தெரிவுசெய்யும் முதன்முயற்சி, முதன்முயற்சியாய் அமைய அனைவரும் இணைவோம்.

நோர்வேவாழ் ஈழத்தமிழர்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட **நோர்வே ஈழத்தமிழ் மக்களவை,** வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின்படி சுதந்திரமும் இறைமையும் மிக்க தமிழீழ அரசினை அமைப்பதற்காக நோர்வே நாடளாவிய ரீதியில் தொடர்ந்தியங்கும் நோர்வேத் தமிழ் அமைப்புக்களால் தெரிவு செய்யப்படும் **நோர்வே ஈழத்தமிழ் அமைப்புக்கள் தெரிவவை** என இருபிரதிநிதிகள் குழுக்களைக் கொண்டதாக நோர்வே ஈழத்தமிழர் அவை அமையும்.

# செயற்பாடுகள் எப்படி அமையும்?

- தாயக உறவுகளின் துயர்துடைத்தல்
- அரசியல், கலாசாரம், தமிழ் அடையாளம் (மொழியும் பாரம்பரியமும்) இன நல்லிணக்கம் எனப்பல்வேறு தளங்களிலும் தக்கபணி புரிதல்
- புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றுதல்
- வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின்படி சுதந்திரமும் இறைமையும் மிக்க தமிழீழ அரசினை அமைப்பதற்காகப் பாடுபடுதல்






**வன்னி வதைமுகாம்களில், திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் வாடிடும் உறவுகளின் வாட்டத்தைப் போக்கிடுவோம்**



# அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு, தமிழர் அடையாளம் (மொழியும் பாரம்பரியமும்) கல்வி, கலை, இன நல்லிணக்கம் எனப்பல்வேறு தளங்களிலும் தக்க பணி புரிதல்







## பிராந்தியப்பட்டியல்:

நோர்வே ஈழத்தமிழர் அவையினை அமைக்கும் நோக்கங்களுக்காக ஈழத்தமிழ் மக்களின் குடித்தொகை பரம்பலின் பிரகாரம் நோர்வே ஐந்து பாகங்களாக வகுக்கப்படுகின்றது.

- *கிழக்குப் பிராந்தியம் - ஒன்பது பிரதிநிதிகள்*
  Oslo, Akershus, Hedmark, Oppland, Telemark, Østfold, Vestfold, Buskerud
- *மேற்குப் பிராந்தியம் - ஒரு பிரதிநிதி*
  Hordaland, Sogn og Fjordane
- *மத்திய பிராந்தியம் - ஒரு பிரதிநிதி*
  Møre og Romsdal, Nord-Trøndelag, Sør-Trondelag
- *தெற்கு மற்றும் தென்மேற்குப் பிராந்தியம் - ஒரு பிரதிநிதி*
  Vest-Agder, Aust-Agder, Rogaland
- *வடக்குப் பிராந்தியம் - ஒரு பிரதிநிதி*
  Nordland, Troms, Finnmark

மேலதிக விபரங்களுக்கு: www.tamilvalg.com / www.ncet.no

# உண்மைகள் உறங்குவதில்லை

–சசி

2009, சனவரி மாதம் வன்னியின் மகிழ்வான காலங்கள் படிப்படியாக மூட்டைக்கட்டித் தூக்கிப்போகப்படுகின்றன . எங்கு பார்த்தாலும் சோகம் அப்பிய முகங்களும், இவ்வளவு காலம் சேர்த்துழைத்த சொத்துக்களை இடம்பெயர்வோடு எடுத்துச் செல்லும் முயற்சியும்தான். சிறிலங்கா இராணுவம் உடையார்கட்டு குளத்திற்கு அருகில் வந்துவிட்டதாக செய்தி . செல்மழை உடையார்கட்டு சனநெருக்கடி மிக்கப் பகுதியை சதா பதம் பார்த்தபடி இருந்தது. அதிலும் குறிப்பாக உடையார்கட்டு பாடசாலையில் இயங்கும் கிளிநொச்சி மருத்துவமனையைச் சூழவும் அதற்குள்ளும் செல்லடி மையம் கொள்கிறது.

உடையார்கட்டு பாடசாலையோ மிகக்கடினமான முயற்சியில் ஓரளவு இயங்கக்கூடிய மருத்துவமனையாக மாற்றப்பட்டிருந்தது. காயப்பட்ட மக்களை ரைக்டர்களிலும், வாகனங்களிலும் கொண்டுவந்து கொண்டிருந்தார்கள். சத்திர சிகிச்சைக் கூடம் முனைப்புடன் இயங்கிக்கொண்டிருந்தது. அன்றைய தினம் வந்த காயம்பட்டவர்கள் அனைவருக்கும் சத்திர சிகிச்சை செய்து முடித்து வெளிவரத் தயாரானோம். சத்திர சிகிச்சைக்கூட வாசலுக்கருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நின்றது. மோட்டார் சைக்கிளினை ஒருவர் ஒட்டி வர, பின்னிருந்தவர் ஒரு பதினெட்டு வயது பெண்பிள்ளையைக் கிடத்தி வைத்திருந்தார். பெண் பிள்ளையின் தலையில் பாரிய காயம். உடனே சத்திர சிகிச்சைக் கூடத்தின் முன்னமைந்திருந்த அனுமதி விடுதிக்குள் (Admission-Ward) அந்த நோயாளியைக் கொண்டு செல்லும்படி நான் பணித்தேன். என்னையும் அனுமதி விடுதிக்குச் சென்று அந்த நோயாளியைப் பார்க்குமாறு எனது பிரதான மருத்துவர் கட்டளையிட்டார். நான் எனது சத்திர சிகிச்சை உடையை மாற்றிக்கொண்டு அனுமதி விடுதிக்குப் போனேன். அனுமதி விடுதி மருத்துவர் அந்நோயாளியைப் பார்த்துவிட்டு வாசல் பக்கம் வந்தார். 'என்ன மச்சான், எப்படி ?' என்று வினவ, அது போய்ட்டது மச்சான் என்றான் அலுத்தபடி. OK டா என்று திரும்பியவனுக்கு ஒரு தாய் கத்திக்கொண்டு வந்தது உணர்வைத் திசை திருப்பியது..

எனக்கு அந்த தாயை நன்கு தெரியும். 2006 ஆம் ஆண்டு பத்தாம் மாதம் செஞ்சோலை வளாகத்தில் சிறிலங்கா இராணுவ விமானங்கள் இலக்கு வைத்து தாக்கியதில் காயமடைந்திருந்த மாணவியின் தாய். திரும்பி இறந்துக் கிடந்த பிள்ளையைப் பார்த்தேன். ஆம்! ஒரு கால் இல்லைதான். இந்தத் தாயின் பிள்ளைதான். அந்தத் தடவை இந்தப் பிள்ளையைக் காப்பாற்ற என்ன பாடுபட்டோம். ஒரு கால் சிதைந்தபடி வயிற்றிலும் பாரிய காயத்துடன் வந்திருந்த அப்பிள்ளையை வேகமான சத்திர சிகிச்சையில் நான் எனது பிரதம மருத்துவர் உள்ளாக இரத்ததானம் செய்து அப்போது அப்பிள்ளையை எழுப்பினோம். அந்தத்தாய், எமது வாயால் இனி இந்தப் பிள்ளைக்கு ஆபத்து இல்லை என்று சொல்லும் வரை சாப்பிடாமலே கிடந்தாள். எனது பிள்ளைக்கு ஏதாவது என்றால் நானும் போய்டுவேன் என்றபடியே ஒரு கிழமைக்கு மேலாக உணவற்று இருந்தாள்.

இந்தப் பிள்ளை இந்த தாய்க்கு ஒரே பிள்ளை. இந்தத் தாயின் கணவன் ஒரு பேக்கரியில் பாண் கட்டி கடைகளுக்குப் போடும் வேலையைச் செய்திருந்தான். 1989 ஆம் ஆண்டு ஒரு அதிகாலையில் பேக்கரியில் இருந்து சைக்கிளில் பாண் கட்டிப்போகும்பொழுது இந்திய இராணுவம் சுட்டு அவன் மடிந்தான். அன்றிலிருந்து வீடு வீட்டாய்க் கூலிக்குபோய் கிடுகு பின்னி விற்று இந்தப் பிள்ளைதான் உலகம் என வாழ்ந்தாள். க.பொ.த சாதரண தரத்தில் நல்ல பெறுபேறுகள் எடுத்திருந்ததாயும் க.பொ.த உயர்தரம் படிப்பதையும் அப்போது சொல்லியிருந்தாள். பிள்ளையின் உடல் ஓரளவு குணமாகியிருந்த வேளையில், பிள்ளைக்கு இனி சாப்பாடு கொடுக்கலாம்? என்று சொன்ன அன்றுதான் வீடு போய் இடியாப்பம் அவித்து வந்திருந்தாள். பிள்ளையைச் சாப்பிடு என்று ஊட்டிவிட, இல்லை நீங்கள் முதலில் சாப்பிடுங்கோ என்று அடம்பிடிக்க, கடைசியாக பிரதம மருத்துவரே வந்து இருவரையும் விடுதிக்குள்ளே சாப்பிட அனுமதி கொடுத்தார்.

பிள்ளைக்கு வலது கால் முழங்காலுக்குக் கீழ் இல்லை. 'அம்மா! காயம் எல்லாம் மாறின பிறகு பொய்க்கால் போடலாம்... பொய்க்கால் போட்டால் எல்லா வேலையும் செய்யலாம்' என்றபடி எனது காலைக் காட்டினேன். பாவம் அந்தத்தாய். அப்போதுதான், எனக்கும் கால் இல்லை என்பது அந்த தாய்க்கு தெரிந்தது. தாயின் கண்களில் நீர் பனித்திருந்தது. 'தம்பி! என்ர பிள்ளைக்கு கால் இல்லாட்டிப் பரவாயில்லை. நான் தூக்கிப்பார்ப்பேன். என்ர பிள்ளைய நான் அப்படித்தான் வளர்த்தனான்'. ..தம்பி! ..தம்பி! என்ற அந்தத் தாயின் சத்தம் என்னை நிஜ உலகிற்கு திருப்பிற்று.

'தம்பி! தம்பி! என்ரை பிள்ளைக்கு எப்படி இருக்கு? ஒருக்கா பாருடா'. நான் இந்தத் தாய்க்கு என்ன சொல்வது? எப்படி சொல்வது? உனது பிள்ளை இறந்துவிட்டதாக!. 'தம்பி, என்ர பிள்ளை Campus க்கு எடுபட்டுட்டாளடா! பிள்ளை படிச்சு வந்திட்டாலண்டா இனியாவது சந்தோசமா வாழலாம் என்று நினைச்சன்டா. பெரிய டோக்டர ஒருக்கா கூட்டி வந்து காட்டடா'. கடவுளே மருத்துவ வாழ்க்கையில் கடின உழைப்பு மனதை கஷ்டப்படுத்தாது. ஆனால், இந்த தர்மசங்கடமான மன நிலை எதிரிக்கும் வந்துவிடக்கூடாது. பிரதான மருத்துவரைக் கூட்டி வரலாம். ஆனாலும், பாவம் அவரிண்ட மன நிலை உடைந்துப் போனாலும் நல்லதில்லைத்தான். தொடர்ந்தும் case வரும்தானே. என்றாலும் இந்தத் தாயை சமாளிக்க முடியாது. பிரதம மருத்துவரைக் கூட்டி வர முடிவு செய்தேன். அவர் வரும்பொழுது, 'எனது பிள்ளையைக் காப்பாற்றுங்கோ! காப்பாற்றுங்கோ!' என்று அவரின் காலில் விழுந்து அழுதாள் அந்தத் தாய். 'பொறுங்க அம்மா!' என்றபடி சென்று பிள்ளையைப் பரிசோதித்துவிட்டு திரும்பினார் பிரதம மருத்துவர். 'காப்பாற்றுங்கோ! காப்பாற்றுங்கோ!' என்ற அலறலுக்கு பதிலாய் கண்ணீர் துளிதான் வீழ்ந்தன.

---

# நோர்வே ஈழத்தமிழர் அவை குறித்த தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் நிலைப்பாடு

நோர்வே ஈழத்தமிழர் அவை ( Norwegian Council of Eelam Tamils, NCET) என்ற ஜனநாயக முறையிலான மக்கள் பங்களிப்புடனான நாடுதழுவிய கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கான ஆரம்ப முன்னெடுப்புக்களை சுயாதீனமான குழு ஒன்று 2008ம் ஆண்டுதொடக்கம் மேற்கொண்டுவந்தது.

அதேவேளை, கடந்த மே 10ம் திகதியன்று சுயாதீனமான முறையில் ஊத்றுாப் பத்திரிகையினால் நோர்வே வாழ் ஈழத் தமிழர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட வாக்குக்கணிப்பில் 99 வீதமான வாக்காளர்களால் சுதந்திரமும் இறைமையும் பொருந்திய தமிழீழத் தனியரசு என்ற தமிழீழ மக்களின் மக்கள் ஆணை மீளுறுதி செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து வந்த மே மாதத்திற்குப் பின்னான அரசியற் சூழ்நிலையில், புலம்பெயர் ஈழத் தமிழர் வதியும் நாடுகளில் எல்லாம் நாடுதழுவிய ஜனநாயக கட்டமைப்புக்களை உருவாக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை நாமும் எமது அனைத்துலகத் தொடர்பு வட்டாரங்களும் வரித்துக்கொண்டோம்.

இந்தப் புதிய சூழலில், ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுவந்த நோர்வே ஈழத்தமிழர் அவை அமைப்பதற்கான சுயாதீனமான முயற்சி ஒரு காத்திரமான முயற்சியாக அமைவதை நாம் உணர்ந்துகொண்டு, அதுவும் குறிப்பாக நோர்வே வாழ் ஈழத் தமிழர்களின் மக்கள் ஆணையைத் தழுவியதாக அதன் யாப்பு அமைந்திருப்பதையும் (மாதிரி வரைபு எண் 8) தமிழீழ இலக்கு நோக்கிப் பணியாற்றும் அமைப்புக்கள் ஜனநாயக முறையில் பங்குபற்றும் தன்மையையும் அது தன்னகத்தே கொண்டிருப்பதையும் வரவேற்று, இந்த முன்னெடுப்புக்கு எமது பூரண ஆதரவை வழங்குவதென்று நாம் முடிவுசெய்துள்ளோம் என்பதை இத்தால் நோர்வே வாழ் ஈழத்தமிழர்களுக்கு அறியத்தருகிறோம்.

இந்தத் தேர்தலானது ஜனநாயக விழுமியத்தின் அடிப்படையில் சுயாதீனமான ஒரு தேர்தற்குழுவால் பக்கச்சார்பற்ற, நம்பகமான முறையிலான கண்காணிப்புடன் நடைபெறவேண்டும் என்ற நோக்கோடு இதன் ஆரம்பக்குழுவும், யாப்புக்குழுவும் ஒரு தேர்தல் குழுவும் இயங்க முன்வந்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

தாயகத்தில் எமது மக்கள் படுகின்ற இன்னல்களைப் போக்கக் குரல்கொடுக்கும் மனிதாபிமானக் குரலாகவும் சுதந்திரத்தை நோக்கிய எமது தேசிய இனத்தின் பயணத்தில் நோர்வே வாழ் ஈழத்தமிழரின் ஒன்றித்த ஒரே குரலாக நோர்வே ஈழத்தமிழர் அவை அமைய வேண்டும் என்பது எமது விருப்பு. எந்தவிதமான குழுநிலையும், வேற்றுமையும் பாராட்டாது தமிழீழத் தேசியம் என்ற பொதுத் தளத்தில், எமது தேசிய இலக்குக் குறித்த கருத்தியல் ரீதியான ஒன்றித்த கருத்தோடு அனைவரின் பங்களிப்பையும் உறுதிசெய்து முன் நகர்வோம்.

-இணைப்பாளர் சி.முரளி